12th November 1965]

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Due to inadequacy of mineral resources, there is no proposal to start a mineral-based industry in Dharmapuri district.

(*b*) Does not arise.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, வட சேலம் என்று சொல்வதை விட தருமபுரி மாவட்டத்திலே அதிகமான சுண்ணாம்புக் கல் கிடைக்கும், அதிலிருந்து சிமெண்ட் தொழிற்சாலை வைக்க வாய்ப்பு இருக்கிறது என்று முன்பு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தனிப்பட்டவர்களுக்குக் கூட லைசென்ஸ் கொடுக்கலாம் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, தனிப்பட்டவர்களுக்கு லைசென்ஸ் கொடுத்தோ அல்லது அரசாங்கமோ ஒரு சிமெண்ட் தொழிற்சாலை வைப்பதற்கான முயற்சி எடுக்கப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முதலிலே ஓர் அளவுக்குக் கிடைக்கும் என்று நமக்கு எக்ஸ்பெக்டேஷன் இருக்கும். அதை வைத்துச் சொல்வது உண்டு. அடுத்தபடி, டீடெய்ல்டு இன்வெஸ்டிகேஷன் செய்த பிறகு முடிவு செய்வது உண்டு. டீடெய்ல்டு இன்வெஸ்டிகேஷனிலே பார்த்ததில், அங்கே அதிகமாக சுண்ணாம்புக் கற்கள் இல்லை என்றும், அதுவும் நல்ல தரமுள்ளதாக இல்லை என்றும் தெரிகிறது. சிமெண்ட் செய்வதற்கேற்ற சுண்ணாம்புக் கல் இல்லை. ஓரிடத்தில் 7 லட்சம் டன் இருக்கிறது. இன்னோர் இடத்தில் 50 ஆயிரம் டன் இருக்கிறது. மொத்தமாக 7½ லட்சம் டன் அளவுக்குத் தான் இருக்கிறது. இதை வைத்து ஒரு பெரிய தொழிற்சாலை ஆரம்பிக்க முடியாது. சுண்ணாம்பு செய்கிற பாக்டரி வைக்க யாராவது முன்வந்தால், அதைப் பரிசிலிக்கலாம்.

திரு. ம. கமலநாதன் : சிறிய ரக சிமென்ட் தொழிற்சாலை, சிறிய ரக சர்க்கரை தொழிற்சாலை வைக்கும் திட்டத்தை ஊக்குவிப்பது என்ற முயற்சிகள் முன்பு நமது அரசாங்கத்திற்கு இருந்து வந்தது. பெரிய தொழிற்சாலையாக வைக்கவேண்டும் என்று கூடச் சொல்லவில்லை. சிறிய தொழிற்சாலைக்காவது ஊக்கம் அளிக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : யார் முன்வந்தாலும் ஊக்கம் அளிக்கப்படும். ஆனால், அங்கே கிடைக்கும் லைம்ஸ்டோன் சிமென்ட் தொழிற்சாலை வைப்பதற்கு அவ்வளவு எற்றதாக இல்லை என்று அறிக்கை தெரிவிக்கிறது.

* 513 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have proposed to set up a plant for extraction of magnesium useful for defence and aircraft industries from the magnesite deposits in Salem district; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) There is a proposal to set up a production unit for the extraction of magnesium from magnesite. Details have not yet been worked out.